**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**

**IDOP No. 71/2025**

**நாள்.18.03.2026**

எ.ம.சா.1 திரு.பிரசாந்த் மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**<u>மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எனக்கும் மனுதாரருக்கும் 07.07.2021ம் தேதி திருமணம் நடந்த இடம் அக்காள்மடம் புனித சவேரியார் ஆலயம் என்றால் சரிதான். அந்த ஆலயம் எந்த பங்குகோவிலை சேர்ந்தது என்றால் ஆரோக்கிய அன்னை பங்கு ஆலயத்தை சேர்ந்தது. மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவில் ஆரோக்கிய அன்னை பங்கு ஆலயம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், ஆனால் திருமணம் நடந்ததாக சொல்லும் புனிய சவேரியார் ஆலயத்தின் பெயர் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மனுவில் எங்கள் குழந்தையின் பிறந்ததேதி தட்டச்சு பிழை ஏற்பட்டு உள்ளது என்றால் சரிதான். எனக்கும் மனுதாரருக்கும் 12.07.2021ம் தேதிதான் பிரஜன் அஜிஸ் பிறந்தான் என்றால் சரிதான். மனுதாரரை மனைவியை ஏற்றுக்கொண்டுள்ளேன் என்றால் சரிதான். மனுவில் தவறாக குறிப்பிடப்பட்டுள்ள குழந்தை பிறந்த தேதி, திருமணம் நடந்த இடம் மற்றும் எதிர்மனுதாரரின் பெயர் ஆகியவற்றை மனுதாரர் திருத்திக்கொள்வதற்கு எனக்கு ஆட்சேபனை இல்லை என்றால் சரிதான்.

நான் தாக்கல் செய்துள்ள எதிருரையிலும், நிரூபண வாக்குமூலத்திலும் மனுதாரர் கோரியுள்ள விவாகரத்து வழங்குவதற்கு தயாராக உள்ளேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மனுதாரருக்கு நான் கணவர் என்ற முறையிலும், குழந்தைக்கு தந்தை என்ற முறையில்



MEHBUB ALI KHAN A K Digitally signed by MEHBUB ALI KHAN A K Date: 2026.03.18 16:44:06 +0530

இருவரையும் கவனித்துக்கொள்ளும் பொறுப்பு எனக்கு உண்டு என்றால் சரிதான். நான் அவர்களை பராமரிக்க தயாராக உள்ளேன் என்றால் சரிதான்.

நான் 3 வருடமாக மனுதாரரை பிரிந்து, மனுதாரர் மற்றும் குழந்தையை கவனிக்காமல் வாழ்ந்து வருகிறேன் என்றால் சரியல்ல.

MEHBUB ALI KHAN A K

Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.03.18 16:44:03 +0530

மறு விசாரணை – இல்லை.

முதன்மை மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம் .